புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

=====================================================================

# பெரியாழ்வார் பாசுரங்களில் தாய்மைப் பண்புகள்

=====================================================================

**ஆய்வாளர்**
**நா. கிருஷ்ணவேணி,**
*முனைவர் பட்ட முழுநேர மாணவி*
*Ref. No. 05759/Ph.D.K6/Tamil/Full Time / April 2018*
*பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது*
*அ.வீ.வா.நி. ஸ்ரீ புஷ்பம் கல்லூரி (தன்னாட்சி),*
*பூண்டி – 613 503, தஞ்சாவூர் மாவட்டம்.*

நெறியாளர்
முனைவர் கோ. இராஜேஸ்வரி
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது
*அ.வீ.வா.நி. ஸ்ரீ புஷ்பம் கல்லூரி (தன்னாட்சி),*
*பூண்டி – 613 503, தஞ்சாவூர் மாவட்டம்.*

=====================================================================

**ஆய்வுச் சுருக்கம் :**

*நாலாயிர திவ்யப் பிரபந்தம் பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பட்ட தொகுப்பாகும். காக்கும் கடவுளான திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு திருமாலின் அவதாரச் சிறப்புக்களையும், கல்யாண குணங்களின் சிறப்புக்களையும் மையமாக வைத்துப் பாடப்பட்டுள்ளது. அவற்றில் பெரியாழ்வாரால் பாடப்பட்ட திருப்பல்லாண்டும், பெரிய திருமொழியும் திருமாலின் அவதாரச் சிறப்புகளை விளக்குகிறது. கிருஷ்ண அவதாரச் சிறப்புக்களில் பெரியாழ்வார் தன்னைத் தாயாகப் பாவித்து, கிருஷ்ணனை குழ்நதையாகப் பாவித்துப் பாடிய தாய்மைப் பண்புகளை இக்கட்டுரை ஆராய்கிறது. சங்க இலக்கிய நூல்களான திருக்குறள், நான்மணிக்கடிகை, குறுந்தொகை ஆகியவற்றில் காணப்படும் தாய்மைப் பண்புகளான தாலாட்டு, சந்திரனை அழைத்தல், முகம் அசைத்து ஆடுதல், சப்பாணி கொட்டுதல், நீராட அழைத்தல், தலைவாரி பூச்சூட்டல், குழந்தையின் திருமேனியழகு கண்டு வர்ணனை செய்தல் ஆகியவற்றில் காணப்படும் தாய்மை உள்ளச் செயல்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. தாலப் பருவம், அம்புலிப் பருவம், செங்கீரைப் பருவம் போன்ற பருவ நிலைகளைச் சிறப்பாகப் பாடியுள்ளதால் பிற்கால பிள்ளைத்தமிழுக்கு வித்திட்டமை கூறப்பட்டுள்ளது. மரபு சார்ந்த பழக்க வழக்கங்களையும் பெரியாழ்வார் சிறப்புறக் கூறியமையால் நாட்டுப்புறச் சாயல் தன்மையும் இங்கு கூறப்பட்டுள்ளது. இவ்வாய்வில் விளக்கமுறை ஆய்வு, உளவியல்*

*ஆய்வு முறை, நாட்டுப்புறப் பண்பாட்டு ஆய்வு முறை ஆகிய ஆய்வு முறைகள் விளக்கப்பட்டுள்ளது. முடிவுரையில் பெரியாழ்வாரின் பாசுரங்களில் தாய்மைப் பண்புகள் காணப்படுகின்றன என்னும் கருதுகோள் நிறுவப்பட்டுள்ளது. ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்களின் விவரம் துணைநூற்பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது.*

***முன்னுரை***

*பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பெற்றது நாலாயிர திவ்யப் பிரபந்தம் ஆகும். தமிழ் வேதமான நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் காக்கும் கடவுளான திருமாலின் அவதாரச் சிறப்புக்களைப் பாடியுள்ளனர். இவர்களுள் பெரியவராய்த் திகழும் பெரியாழ்வார் பாடியது திருப்பல்லாண்டும், திருமொழியுமாகும். அவற்றில் திருமாலின் அவதாரங்களுள் ஒன்றான கிருஷ்ணாவதாரத்தில் கண்ணனது இளம்பருவ நிலையைப் பாடியுள்ளார். தன்னை யசோதையாகவும், கண்ணனைக் குழந்தையாகவும் பாவித்துப் பாடிய பாசுரங்களில் வெளிப்படும் தாய்மை நிலைப் பண்புகளில் சமூகம் சார்ந்த பழக்க வழக்கங்கள், குழந்தைக்காகத் தாய் செய்யும் செயல்கள் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.*

***கருதுகோள்***

*பெரியாழ்வார் பாசுரங்களிலும் தாய்மை உணர்வுகள் காணப்படுகின்றன என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.*

***ஆய்வு அணுகுமுறைகள்***

*இவ்வாய்வில் விளக்கவியல் ஆய்வு முறை, உளவியல் ஆய்வு முறை, நாட்டுப்புறப் பண்பாட்டு ஆய்வு முறை ஆகியன பின்பற்றப்பட்டுள்ளன.*

***தாய்மை என்பதன் விளக்கம்***

*தாய் என்ற சொல்லுக்கு முதன்மை எனப் பொருள் தருகிறது கௌரா தமிழ் அகராதி.*[1]

*தாய்மை என்ற சொல்லுக்கு குழந்தை பெறும் நிலை, தாய்க்குரிய தன்மைகள், குணங்கள் என க்ரியா தமிழ் அகராதி பொருள் தருகிறது.*[2]

***தாய்மையின் சிறப்புகள்***

*குழந்தையின் வளர்ச்சியில் முதன்மையாகக் கருதப்படுபவள் தாய். எந்த ஓரிடத்திலும் உயர்நிலையில் தன் பிள்ளை பேசப்பட வேண்டும் என நினைப்பவள் தாய். தன் பிள்ளை உயர்ந்தவன், சிறந்தவன், கல்வி கேள்விகளில் சிறந்தவன் எனப் பாராட்டப்படும்போது அவனை ஈன்ற பொழுதினைவிட அதிக மகிழ்ச்சி அடைபவள் தாய் என்று வள்ளுவர்,*

***ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்***
***சான்றோன் எனக்கேட்ட தாய்***[3]
*என்று கூறியுள்ளார்.*

*மனித வாழ்வு பல உறவுகளால் சூழப்பட்டு இருப்பினும் அவற்றில் தாயின் உறவு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். அத்தனிச்சிறப்பை அற இலக்கியங்களும் கூறுகின்றன.*

***அந்தணரின் நல்ல பிறப்பில்லை; என் செயினும்***
***தாயிற் சிறந்த தமரில்லை; யாதும்***
***வளமையோ டொக்கும் வனப்பில்லை; எண்ணின்***

***இளமையோ டொப்பதூ மில்*** [4]

*இதில் தன்னை எத்துணைக் கண்டித்து ஒறுத்தாலும்கூட, குழந்தைக்குத் தாயைவிட மேலான உறவு யாருமில்லை எனவும், இளமைப்பருவ வாழ்க்கைக்கு இணையானது வேறில்லை எனவும் நான்மணிக்கடிகை கூறுகிறது.*

*மேலும், தாய் அடித்தாலும் குழந்தை மீண்டும் தாயிடம் செல்லும் என்பதனை விளம்பி நாகனார் தாயின் உறவினை மேம்படச் செய்துள்ளார்.*

***மலைப்பினும் வாரணம் தாங்கும்; குழவி***
***அலைப்பினும் அன்னே! என்று ஓடும்; சிலைப்பினும்***
***நட்டார் நடுங்கும் வினை செய்யார்; ஒட்டார்***
***உடன் உறையும் காலமும் இல்*** [5]

*எனப் பாடியுள்ளார். அதேபோல் தலைவன் தலைவி அன்பிற்குச் சான்றாக உயிரினங்களில் தாய்மைக்கென்று தனிச்சிறப்பிடம் உண்டு. எத்தகைய சினத்தையும் தாய் குழந்தையிடம் வெளிப்படுத்தினாலும் குழந்தை தாயிடமே செல்லும். அதேபோல் தாய் குழந்தைக்கு எத்தகையவளோ அதேபோல் தலைவன் தலைவியின் அன்பிற்கு உட்பட்டவன் என்பதனைக் குறுந்தொகையில் அம்மூவனார்,*

***நனைமுதிர் ஞாழல் சினைமருள் திரள்வீ***
***..................***
***தாய் உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு***
***அன்னா என்னும் குழவி போல்*** [6]

*எனப் பாடியுள்ளார்.*

***தாய்மைப் பண்புகள்***

*பெரியாழ்வார் தனது பாசுரங்களில் தாய் தனது குழந்தைக்குச் செய்யும் தாலாட்டுதல், நீராடச் செய்தல், அமுதுண்ணச் செய்தல், குழல் வாருதல், பூச்சூட்டுதல், அம்புலியை அழைத்தல், தளர்நடை பழகுதல், விளையாட்டுகளில் ஈடுபடச் செய்தல் எனத் துயிலெழுப்புதல் முதல் உறங்கச் செய்தல் வரையிலான அனைத்து நிகழ்வுகளையும் காட்டியுள்ளார். இச்செயல்கள் மூலம் பிள்ளைத் தமிழின் சிறப்பினையும் கண்ணனின் குழந்தைப் பருவத்தை அவன் மண்ணில் திளைந்தது போலக் காட்டியுள்ளார். தாய்மை என்னும் தனிமனித எண்ணங்களைக் கூறுவதால் இங்கு உளவியல் ஆய்வு முறை விளக்கப்பட்டுள்ளது.*

***அவதாரச் சிறப்பு***

*ஆயர் குலத்தில் பிறந்த கண்ணனை எண்ணி மகிழ்ச்சியில் கொண்டாடினார்கள். கண்ணன் வாயினுள்ளே உலகங்களைப் பார்த்த பெண்கள் ஆச்சரியம் அடைந்தனர். இப்பிள்ளை ஆயர்குலப் பிள்ளை இல்லை. பெறுவதற்குரிய பெருந்தெய்வம் என யசோதையிடம் கூறினர். கல்யாண குணங்கள் உடைய தீர்மைச் சிறப்புடையவன் எனக் கொண்டாடி மகிழ்ந்தனர்.*

*மேலும், குழந்தை குறும்பைப் பொறுக்கமுடியாமல் வருந்துவதாக இருந்தாலும் அதனையும் தாய் பெருமையுடன் கூறுவதாகவே அமைந்துள்ளது.*

***வாயுள் வையகம் கண்ட மடநல்லார்***
***ஆயர் புத்திரன் அல்லன், அருந்தெய்வம்;***

***பாயசீர் உடைப்பண்பு உடைப்பாலகன்***
***மாயன் என்று மகிழ்ந்தனர் மாதரே***[7]
*என்று அவதாரச் சிறப்பினையும்,*

***கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும்;***
***எடுத்துக் கொள்ளில், மருங்கை இறுத்திடும்;***
***ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும்;***
***மிடுக்கு இலாமையால் நான் மெலிந்தேன் நங்காய்***[8]
*எனக் குழந்தைக் குறும்பைப் பெருமையாகவும் பாடி பாசுரம் இயற்றியுள்ளார்.*

***தாலாட்டு***

*தாய் குழந்தைக்கு தனது உறவினர்களின் பெருமையைக் கூறித் தாலாட்டுப் பாடி உறங்கச் செய்தல் மிகவும் சிறப்பானதாகும். யசோதையின் நிலையில் தம்மைப் பாவித்து கண்ணனுக்குத் தாலாட்டுப் பாடுகிறார்.*

***மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி***
***ஆணிப் பொன்னால் செய்த வண்ணம் சிறுத்தொட்டில்***
***பேணி உனக்குப் பிரமன் கொடுத்தான்;***
***மாணிக் குறளனே! தாலேலோ!***
***வையம் அளந்தானே! தாலேலோ!***[9]
*என்று தாலாட்டியும்,*

***எழில் ஆர் திருமார்வுக்கு ஏற்கும் இவை என்று***
***அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு***
***வழுஇல் கொடையான் வயிச்சிரவணன்***
***தொழுது உவனாய் நின்றான் தாலேலோ!***[10]
*என்றும் கண்ணன் உறங்கத் தொட்டிலைப் பிரம்மனும், அரைவடத்தைச் சிவபெருமானும், சதங்கையை இந்திரனும், வலம்புரிச் சங்கை தேவர்களும், ஆபரணங்களைக் குபேரனும், முத்துக்களை வருணனும் அளித்துள்ளனர். அவர்கள் யாவரும் உனக்கு இணக்கமானவர்கள் எனப் பாடி உறங்குவாயாக எனத் தொட்டிலிட்டுச் சீராட்டி நாட்டுப்புறச் சாயலையும், பிற்காலப் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் கூறான தாலப் பருவத்திற்கும் வித்திட்டுள்ளமை பெருமை வாய்ந்ததாகும்.*

***சந்திரனைக் கூப்பிடுதல்***

*தாய் தன் குழந்தைக்குக்கூட விளையாட வரும்படி சந்திரனை அழைத்து அம்புலிப் பருவம் என்னும் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு வித்திட்டமை சிறப்புக்குரியதாகும்.*

***என் சிறுக்குட்டன் எனக்கு ஓர் இன்னமுது எம்பிரான்***
***தன் சிறுக்கைகளால் காட்டிக் காட்டி அழைக்கின்றான்***
***அஞ்சன வண்ணனோடு ஆடல் ஆட உறுதியேல்***
***மஞ்சில் மறையாதே மா மதீ! மகிழ்ந்து ஓடி வா***[11]
*எனப் பாடி தன் குட்டிப்பையன் அழகான சிறுகைகளால் என தாய் தன் குழந்தையை வர்ணித்து வான்மதியையேகூட விளையாட வரும்படி அழைப்பது அழகு வாய்ந்ததாகும்.*

***முகம் அசைத்து ஆடுதலும் கைகொட்டி விளையாடுதலும்***

*தாய் குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் இரசித்து விளையாடச் செய்யும் என்பதில் குழந்தையின்மீது கொண்ட பாசமும் பரிவையும் காட்டும் உளச் செயலாகும். அதனைப் பெரியாழ்வார் செங்கீரை ஆடச்செய்தல் மற்றும் கைகொட்டி விளையாடுதல் போன்றவற்றைப் பாசுரமாக இயற்றியுள்ளமை படிப்பவர் மனதில் தாய்மை உணர்வை பொங்கச் செய்துள்ளார்.*

***நம்முடை நாயகனே! நான்மறையின் பொருளே!***
***நாவியுள் நற்கமல நான்முகனுக்கு ஒரு கால்***
***தம்மனை ஆனவனே! தரணி தல முழுதும்***
***............***
***அம்ம! எனக்கு ஒருகால், ஆடுக செங்கீரை***
***ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே!***[12]

*என்றும் தன் மடியில் உட்கார்ந்து சப்பாணி கொட்டச் சொல்வதாக தாய்மை உணர்வினை,*

***பல்மணி முத்து இன்பவளம் பதித்தன்ன***
***என் மணிவண்ணன் இலங்கு பொன் தோட்டின் மேல்***
***நின் மணிவாய் முத்து இலங்க, நின் அம்மை தன்***
***அம்மணி மேல் கொட்டாய் சப்பாணி***
***ஆழியங் கையனே! சப்பாணி***[13]

*என்று காட்டியுள்ளார்.*

***தளர்த்து நடத்தலும் அச்சோப் பருவம்***

*குழந்தையானது தத்தி தத்தி தளர்நடை நடந்து வருவது தாய்க்குப் பேரானந்தத்தைத் தரவல்லது. தாய் குழந்தையைக் கட்டி அணைத்துக் கொஞ்சுதல் என்பதும் மிகவும் இன்பம் தரக்கூடிய ஒன்றாகும். அத்தகைய இன்பத்தைப் பெற பெரியாழ்வார் கண்ணனை முத்துப் பற்கள் தோன்றச் சிரிப்பது, செவ்வானத்தின் நுனி கிளையில் பிறைச்சந்திரன் தோன்றுவது போல் உள்ளது எனவும், கழுத்தில் ஆமைத்தாலி காணப்படும் நீலநிறத்தவன் தளர்நடை நடவானோ எனப் பாடியுள்ளமை எண்ணி எண்ணி மனதில் மகிழ்ச்சி பொங்கச் செய்துள்ளார்.*

***செக்கரிடை நுனிக்கொம்பில் தோன்றும்***
***சிறுபிறை முளைப்போல***
***நக்கசெந் துவர்வாய்த் திண்ணை மீதே***
***நளிர் வெண்பல் முளை இலக***
***அக்குவடம் உடுத்து ஆமைத்தாலி***
***பூண்ட அனந்த சயனன்***
***தக்கமா மணிவண்ணன் வாசுதேவன்***
***தளர்நடை நடவானோ!***[14]

*எனவும் பாடி சுருண்ட உன் கருங்குழல் பவளவாய் உதட்டின்மீது விழும் அழகினைக் காண்பது செந்தாமரைப் பூவில் வண்டுகள் தேன் குடிக்க மொய்ப்பது போல் உள்ளது என வர்ணித்து ஐந்து ஆயுதங்களை ஏந்திய உன் அழகிய கைகளாலே தன்னை ஆரத்தழுவி அணைத்துக் கொள்ளுமாறு பாசுரம் இயற்றியமை தாய்மை உள்ளம் கொண்ட பெரியாழ்வாரை எண்ணி பரவசம் அடையச் செய்கின்றது.*

***செங்கமலப் பூவில் தேன் உண்ணும் வண்டேபோல்***
***பங்கிகள் வந்து உன் பவளவாய் மொய்ப்ப***
***சங்கு வில் வான் தண்டு சக்கரம் ஏந்திய***

***அங்கைகளாலே வந்து அச்சோ! அச்சோ!***
***ஆரத் தழுவாய் வந்து அச்சோ! அச்சோ!***

*என அழைத்துள்ளார்.*

***தாய்ப்பால் அருந்த அழைத்தல்***

*தாய்மைக்கே உரிய சிறப்பு தாய்ப்பால் ஆகும். குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் ஆரோக்கியமானதும் எதிர்ப்பு சக்தி நிறைந்ததுமாகும். குழந்தை உணவு உண்ணாமல் இருப்பது கண்டு தாயின் பரிதவிக்கும் மனப்பாங்கைப் பெரியாழ்வார் பாசுரங்களில்,*

***அரவு அணையாய்! ஆலர் ஏறே!***
***அம்மம் உண்ணத் துயிலெழாயே!***
***இரவு உண்ணாது உறங்கி நீ போய்***
***இன்றும் உச்சி கொண்டதாலோ***
***வரவுங்காணேன் வயிறு அசைந்தாய்***
***வனமுலைகள் சோர்ந்து பாயத்***
***திருஉடைய வாய்மடுத்துத்***
***திளைத்து உதைத்துப் பருகிடாயே***[15]

*எனப் பாடி மார்பிலிருந்து வடியும் பாலை அருந்த வருக என்பதில் தாய்மை உள்ளத்தைக் காட்டியுள்ளார்.*

***நீராட அழைத்தல்***

*குழந்தைக்கு நீராட்டுதல் என்பது தாய்க்கு உரிய முக்கிய கடமையாகும். உடல் துர்நாற்றம் நீங்கவும், ஆரோக்கியம் பெருகவும் நீராடுதல் மிகவும் இன்றியமையாதது ஆகும். இதனைப் பெரியாழ்வார் குழந்தையாகிய கண்ணனை வெண்ணெய்யை அளைந்ததால் உண்டான முடை நாற்றத்தையும், விளையாடியதால் ஏற்பட்ட புழுதியையும் போக்க நீராட வருமாறு அழைப்பதாகப் பாசுரம் இயற்றியுள்ளார்.*

*நீராடுவதற்கு தேய்த்துக் குளிக்க எண்ணெய்யும், பூசிக் குளிக்க புளியம்பழக் காப்பையும் நெல்லிமர இலைகள் போட்டு காய்ச்சின நீரையும், மஞ்சள் விழுதையும், மணம் கலந்த சந்தனக் கலவையையும், கண்ணில் இட்டுக் கொள்ளும் மையையும் வைத்திருப்பதாகப் பாசுரம் இயற்றியமை மரபு சார்ந்த பழக்க வழக்கங்கள் என்னும் நாட்டுப்புற சாயலுக்கு வித்திட்டுள்ளமையும் தாய்மை உள்ளத்தையும் அறிய முடிகிறது.*

***வெண்ணெய்.....***
***எண்ணெய் புளிப்பழம் கொண்டு இங்கு***
***எத்தனை போதும் இருந்தேன்***

*எனவும்,*

***காய்ச்சின நீரொடு நெல்லி...***

*எனவும்,*

***கஞ்சன் புணர்ப்பினில்***
***மஞ்சளும் செங்கழுநீரின்***
***வாசிகையும் நாறுசாந்தும்***
***அஞ்சனமும் கொண்டு வைத்தேன்***

*என அழகுபடுத்தியுள்ளமை வாழ்வியல் சார்ந்த பழக்கவழக்கங்களைக் காட்டியுள்ளமையால் இங்கு நாட்டுப்புறப் பண்பாட்டு ஆய்வுமுறை கையாளப்பட்டுள்ளது.*[17]

***குழல் வாருதலும் பூச்சூட்டலும்***

*குழந்தை நீராடிய பின் அதற்கு தலைவாரி பூச்சூட்டி அழகு செய்வது தாய்மையின் இன்றியமையாத பணியாகும். கண்ணன் நீராடிய பின் சிறுவர்களைக் காணச் செல்ல விரும்புகிறான். அதனை மாற்றிக் குழல் வார காக்கையை அழைப்பதாகவும், பூச்சூட்ட கோல்டு கொண்டு வர அழைப்பதாகவும் பாசுரம் இயற்றியுள்ளமை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.*

***உற்றன பேசி நீ ஓடித் திரியாதே***
***அற்றைக்கும் வந்து குழல் வாராய் அக்காக்காய்***
***ஆழியான் குழல் வாராய் அக்காக்காய்18***
*எனப் பாடியும்,*

***திரு உடையாள் மணவாளா!***
***திருவரங்கத்தே கிடந்தாய்***
***மருவி மணம் கமழ்கின்ற***
***மல்லிகைப் பூச்சூட்ட வாராய்***[19]
*எனப் பாசுரம் இயற்றியுள்ளார்.*

***திருமேனியழகு காணுதல்***

*தாய் தன் குழந்தையின் உடல் அழகினைக் கண்டு பூரிப்படைவது தாய்மைப் பண்பை நன்கு உணர முடிகிறது. அத்தகைய உணர்வினைப் பெரியாழ்வார் கண்ணனின் திருமேனி அழகினைப் பாசுரங்களில் வர்ணிப்பது மிகவும் அழகு வாய்ந்ததாகும். அதனைப் பாசுரங்களில்,*

***சீதக்கடலுள் அமுது அன்ன தேவகி***
***கோதைக் குழலாள் அசோதைக்குப் போதாந்த***
***பேதைக் குழவி பிடித்து சுவைத்து உண்ணும்***
***பாதக் கமலங்கள் காணீரே***
***பவள வாயீர்! வந்து காணீரே!***[20]
*எனவும்,*

***முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்***
***தத்தி பதித்துத் தலைப்பெய்தாற்போல் எங்கும்***
***பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்***
***ஒத்திட்டு இருந்தவா காணீரே!***
***ஒண்ணுதலீர்! வந்து காணீரே!***[21]
*என்றும் வர்ணித்துள்ளார். வர்ணனை என்பதும் கற்பனை போன்ற தனிமனித எண்ணம் என்பதனைப் பெரியாழ்வாரின் எண்ணம் என்பதால் இங்கு உளவியல் ஆய்வு முறை விளக்கப்பட்டுள்ளது.*[22] *மேலும், இவ்வாய்வில் தாய்மை பற்றிய பொதுவான கருத்துகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குவதால் இங்கு விளக்கவியல் ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*[23]

***முடிவுரை***

பெரியாழ்வாரின் பாசுரங்களில் தாலப்பருவம், அம்புலிப் பருவம், தளர்நடைப் பருவம் ஆகிய பிற்கால பிள்ளைத் தமிழுக்கு வித்திட்டமை கண்டறியப்பட்டுள்ளது. மரபு சார்ந்த பழக்க வழக்கங்களைப் பற்றி பாசுரம் இயற்றியுள்ளமை நாட்டுப்புறச் சாயலைக் காண முடிகிறது. குழந்தைக்குத் தாய் செய்யும் அன்றாடக் கடமைகளான தாலாட்டுதல், தாய் பால் அருந்த அழைத்தல், அமுது உண்ண அழைத்தல், நீராடுதல், தலைவாரி பூச்சூட்டல் ஆகியவற்றில் தன்னையே கண்ணனுக்கு யசோதை தாயாகப் பாவித்துப் பாடியுள்ளமை ஆழ்வாரின் தாய்மையைச் சிறப்புற அறிய முடிகிறது. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் பாசுரங்களில் தாய்மைப் பண்புகள் காணப்படுகின்றன என்னும் கருதுகோள் இங்கு நிறுவப்பட்டுள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. எஸ். கௌமாரீஸ்வரி, கௌரா தமிழ் அகராதி, ப. 410
2. க்ரியா தற்காலத் தமிழ் அகராதி, ப. 706
3. மு. வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, ப. 15
4. எஸ். கௌமாரீஸ்வரி (ப.ஆ), நான்மணிக்கடிகை மூலமும் உரையும், ப. 36
5. மேலது, ப. 27
6. ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை (மூலமும் தெளிவுரையும்), ப. 604
7. டாக்டர் மதி. சீனிவாசன், நாலாயிர திவ்யப் பிரபந்தம், பக். 20–21
8. த. திருவேங்கட இராமானுஜதாசன், நாலாயிர திவ்யப் பிரபந்தம், முதல் ஆயிரம், ப. 43
9. மேலது, ப. 50
10. மேலது, ப. 52
11. மேலது, ப. 54
12. மேலது, ப. 58
13. மேலது, ப. 63
14. டாக்டர் மதி. சீனிவாசன், நாலாயிர திவ்யப் பிரபந்தம், முதலாயிரம், பக். 44, 45
15. மேலது, பக். 58, 59
16. மேலது, பக். 68–70
17. கு.வெ. பாலசுப்பிரமணியன், ஆய்வியல் நெறிகள், ப. 97
18. டாக்டர் மதி. சீனிவாசன், நாலாயிர திவ்யப் பிரபந்தம், முதலாயிரம், பக். 74, 75
19. மேலது, பக். 78, 79
20. த. திருவேங்கட இராமானுஜதாசன், நாலாயிர திவ்யப் பிரபந்தம், முதல் ஆயிரம், ப. 43
21. மேலது, ப. 44
22. கு.வெ. பாலசுப்பிரமணியன், ஆய்வியல் நெறிகள், ப. 94
23. மேலது, ப. 79

**துணைநூற்பட்டியல்**

1. கௌமாரீஸ்வரி, கௌரா தமிழ் அகராதி, முதற்பதிப்பு, 2003, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை – 14.
2. எஸ். இராமகிருஷ்ணன், க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, முதற்பதிப்பு, 1992, பிரிண்டட், நாகராஜ் அண்ட் கம்பெனி, சென்னை.

3. *திருக்குறள் தெளிவுரை, மு. வரதராசனார், முதற்பதிப்பு, 1949, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், டிடிகே சாலை, சென்னை – 18.*
4. *எஸ். கௌமாரீஸ்வரி (ப.ஆ), நான்மணிக்கடிகை மூலமும் உரையும், முதற்பதிப்பு – 2005, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை – 14.*
5. *ச.வே. சுப்பிரமணியம், சங்க இலக்கியம் எட்டுத்தொகை (மூலமும் தெளிவுரையும்), தொகுதி – 1, முதற்பதிப்பு – 2010, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை – 8.*
6. *டாக்டர் மதி. சீனிவாசன், நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலாயிரம் தொகுதி – 1, முதற்பதிப்பு – 2000, ஶ்ரீ வாராகி பிரிண்டர்ஸ், 144, ஆழ்வார்பேட்டை தெரு, சென்னை – 18.*
7. *புலவர் த. திருவேங்கட இராமானுஜதாசன், நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதல் ஆயிரம் (மூலமும் உரையும்), முதற்பதிப்பு – 2010, உமா பதிப்பகம், சென்னை.*
8. *கு.வெ. பாலசுப்பிரமணியன், ஆய்வியல் நெறிகள், 17ஆம் பதிப்பு – 2012, அனுராதா பப்ளிகேஷன்ஸ், கும்பகோணம்.*